மாண்புமிகு பேரவைத் தலைவர். அரசினர் சட்டமுன் வடிவுகள். அறிமுகம் செய்தல், 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நுண்ணறிவுத் திறத் தொழில்கள், வணிகத் தொழில்கள் மரபுத் தொழில்கள், பணித் தொழில்கள் ஆகியவற்றின் மீதான வரிச் சட்ட முன்வடிவு. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு நுண்ணறிவுத் திறத் தொழில்கள், வணிகத் தொழில்கள், மரபுத் தொழில்கள், பணித் தொழில்கள், ஆகியவற்றின் மீதான வரிச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்.)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை.)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்,

ஏற்போரே அதிகம்.

தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) கால்நடை மருத்துவ மற்றும் அறிவியல் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர். 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் அறிவியல் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன் வடிவு. மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1992 ஏப்ரல் 2] [திரு. எம். ஆனந்தன்]

"1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ மற்றும் அறிவியல் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன் வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்". எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத்தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்ட முன்வடிவை பேரவைமுன அறிமுகம் செய்கிறேன்.

6. மானியக்கோரிக்கைகள், 1992-93, விவாதமும் வாக்கெடுப்பும—தொடர்ச்சி.

மானியக்கோரிக்கை எண் 17—கல்வி-தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1992-93 ஆம் ஆண்டுக்கான மானியக்கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

கல்வி மானியம் என்கிற காரணத்தால் இரண்டு நாட்கள் ஒதுக்கப்பட்டு, நேற்றைய தினம் அதிகமான உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். இன்றும் அதைவிட அதிகமான உறுப்பினர்கள் பேச வேண்டும் என்று வாய்ப்பு கோரியிருக்கிறார்கள். முன் வரிசையில் இருக்கின்ற உறுப்பினர்கள் பலர் பேசவேண்டியிருக்கிறது. ஏற்கனவே நான் கொடுத்த வாக்குறுதியின்படி 12-30 முதல் 12-45 மணிக்குள் பதில் அளிக்க வாய்ப்பு அளிக்க வேண்டியுள்ளது. இதையெல்லாம் கருத்தில் கொண்டு உறுப்பினர்கள் 7 மணித்துளிகளுக்குள்ளும், முன் வரிசை தலைவர்கள், இருக்கிற நிலைமைகளை உணர்ந்து பத்து நிமிடத்திற்குள்ளும் முடித்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திரு. எஸ். டேனியல்ராஜ்.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS